# வடமாகாணக் கல்வித்திணைக்களம்
## மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை ,2017 வைகாசி
General Certificate of Education (Adv. Level ) Examination ,May 2017

பொருளியல் I
Economics I

21 T I

இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* பல்தேர்வு வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

**1.** பின்வருவனவற்றுள் பேரினப் பொருளாதார நியமக் கூற்றாக அமையும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) இலங்கையில் வசிக்கும் டானியலின் சம்பளம் விதுசனின் சம்பளத்திலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்றது.

(2) இலங்கையிலுள்ள பண்டாவின் தோட்டத்தின் தேயிலை உற்பத்தியைக் காட்டிலும் சில்வாவின் தோட்டத்தின் தேயிலை உற்பத்தியானது அதிகரிக்கப்பட வேண்டும்.


(3) இலங்கையின் பொதுவிலைமட்டம் கடந்த காலங்களில் குறைவடைந்தது மக்களின் மெய்வருமானத்தை அதிகரிக்கச் செய்தது.

(4) இலங்கையில் எதிர்காலத்தில் வறியோர் அல்லாதோர் சனத்தொகையின் வருமான அதிகரிப்பைக்காட்டிலும் வறியோர் சனத்தொகையின் வருமான அதிரிப்பைத் துரிதப்படுத்த வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

(5) இலங்கையில் வாழும் பிரணவன் மற்றும் சுமித்திரனின் வாழ்க்கைத்தரங்கள் வேறுபட்டதாக அமைந்துள்ளது.

**2.** கீழே தரப்பட்டுள்ள வரைபடம் விவசாயப்பொருள்கள் மற்றும் கைத்தொழிற்பொருள்களை உற்பத்தி செய்யும் கற்பனையான பொருளாதாரமொன்றின் உற்பத்திச்சாத்திய வளையியினைக் (Production Possibility Curve) காட்டுகின்றது. கீழேயுள்ள கூற்றுக்களுள் உற்பத்திச் சாத்திய வளையி AB யிலிருந்து AC க்கு நகருவதனை விபரிப்பது எது?

விவசாயப் பொருள்கள் (அலகுகள்)



கைத்தொழிற் பொருள்கள் (அலகுகள்)

(1) பொருளாதாரத்தில் புதிய தொழில்நுட்ப உட்புகுத்தலும்,தொழில்நுட்ப முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது.

(2) விவசாயப்பொருட்களில் எந்தவொரு தாக்கத்தினையும் கொண்டிராத போது கைத்தொழிற் பொருள்களில் மாத்திரம் தாக்கத்தினை கொண்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றம்.

(3) விவசாயப்பொருள்களில் அல்லது கைத்தொழிற்பொருள்களில் குறைந்த அளவினை உற்பத்தி

செய்யக்கூடிய, வளத்தின் பயன்பாட்டில் வீழ்ச்சி.

(4) கைத்தொழிற்பொருள்களின் உற்பத்தியில் பயன்படும் வளங்களை ஈடுபடுத்தாமை.

(5) விவசாயப்பொருள்களில் எந்தவொரு தாக்கத்தினையும் கொண்டிராத போது கைத்தொழிற் பொருள்களில் மாத்திரம் தாக்கத்தினை கொண்டுள்ள தொழில்நுட்ப வீழ்ச்சி.

**3.** அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பக் கிரய விதிக்கு (opportunity cost) அடிப்படையான எண்ணமாக அமைவது;

(1) தொழில்வாய்ப்புமட்ட முன்னேற்றத்துடன் கூலிகள் அதிகரித்தல்

(2) பணவீக்கத்தில் அதிகரிப்புடன் வட்டி வீதங்கள் அதிகரித்தல்.

(3) அனேகமான வளங்கள், உற்பத்தி செய்யும் பொருள்களைவிட வேறு பொருள்களுக்கு மிகவும் கூடிய பொருத்தமானதாக இருத்தல்.

(4) வழமையான நிறுவனமொன்றின் ஊழியக் கிரயங்கள் அதிகரிப்பதுடன் இந்த கிரயக்கூறு மொத்தக் கிரயத்தின் அதிகரித்துச் செல்லும் விகிதாசாரமாக இருத்தல்.

(5) வளங்கள் பூரண மாற்றுப்பயன்பாடுடையதாகக் காணப்படல்.

**4.** பொருளாதாரப்பண்டம் தொடர்பில் மிகவும் சரியான கூற்றைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.

(1) மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் எல்லாப்பண்டங்களும் கட்டாயம் பொருளாதாரப் பண்டங்களே

(2) உற்பத்திச் செலவு காணப்பட்டு அவை மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்யாவிடினும் அவை பூச்சிய விலையில் எதிர்கணியக் கேள்வியுடையதாக இருப்பினும் பொருளாதாரப்பண்டங்களாகவே கருதப்படும்.

(3) பொருளாதாரப் பண்டங்கள் ஒருவருக்கு இலவசமாகக் கிடைப்பின் அது பொருளாதாரமல்லாப் பண்டமாக மாற்றமடையும்.

(4) பொருளாதாரப்பண்டங்களைப் பொறுத்த வரையில் நுகர்வோன் கட்டாயம் விலை செலுத்த வேண்டும்.

(5) அருமையான சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு மனித தலையீட்டுடன் உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ளப்படும் உற்பத்திச் செலவு,அமையச்செலவு உடையவையாகக் காணப்படும்.

**5.** உற்பத்திக்காரணிகளை நிலம் ,உழைப்பு,மூலதனம்,முயற்சி என வகைப்படுத்தி நோக்கலாம் பின்வருவனவற்றுள் முயற்சி என்ற உற்பத்திக்காரணிக்குப் பொருத்தமானது.

(1) உற்பத்திக்கென்று இயற்கையினால் வழங்கப்பட்டுள்ள வினைத்திறனுடைய சகல இயற்கையின் கொடைகளையும் கருதும்

(2) பொருள்கள் சேவைகளின் உற்பத்திக்கென்று மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்,பொருள்கள்

(3) பொருள்கள் சேவைகளின் உற்பத்திக்கென்று மனிதனால் வழங்கப்படும் உடல் உள ரீதியான முயற்சிக்காரணி

(4) உற்பத்திக்கென்று மனிதனால் உருவாக்கப்பட்ட கம்பனிக்கட்டடம்,பொறித்தொகுதிகள் போன்றன.

(5) விவசாய விளைச்சலைப் பயன்படுத்தி உணவுப்பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில் ஒன்றை ஆரம்பித்தல்.

**6.** கூற்று 1 : சமத்துவமின்மையானது பொதுவாக சமவுடமைப் பொருளாதாரத்தைக் காட்டிலும் சந்தைப் பொருளாதாரத்தில் அதிகம் காணப்படுகின்றது.

கூற்று 2 : சந்தைப் பொருளாதாரத்தில் விருத்திமுறை வரிகள் விதிதக்கப்படுவதால் சமத்துவமின்மை மிகக் குறைந்தளவில் காணப்படுகின்றது.

மேற்படிக் கூற்றுக்களில் இருந்து பின்வருவனவற்றில் மிகவும் சரியானது.

(1) கூற்று 1 பிழை கூற்று 2 சரி
(2) இரண்டு கூற்றும் சரி
(3) கூற்று 2 மட்டும் சரி
(4) கூற்று 1 சரி கூற்று 2 பிழை
(5) இரண்டு கூற்றும் மிகவும் பிழையானது.

**7.** இஸ்லாமிக் பொருளாதாரம் ஒன்றில் அவதானிக்கப்படக் கூடிய பண்பு பின்வருவனவற்றுள் எது

(1) கறுப்புச் சந்தை தோற்றம் பெற அனுமதித்து அதிக இலாபத்தினைச் சம்பாதித்தல்

(2) அதிக வட்டி வருமானங்கள் உழைக்கக் கூடிய தொழில்களை ஆரம்பிக்க அனுமதித்து அதிக வருமானம் ஈட்ட வழிசெய்தல்.

(3) போதைப் பொருள் வியாபாரம் போன்ற சட்டவிரோதமான தொழில்களுக்கு முற்றாகத் தடை விதித்தல்.

(4) முழுக்க முழுக்க விலைப் பொறிமுறைச் செயற்பாட்டின் கீழ் பொருளாதாரச் செயற்பாடுகள் நடைபெறல்.

(5) முழுக்க முழுக்க அரச கட்டளைக்கமைவாகப் பொருளாதாரச் செயற்பாடுகள் நடைபெறல்.

**8.** ஒரு பொருளின் சந்தைக் கேள்வி இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ் நோக்கிய சரிவுடையதாக அமையக் காரணம்

(1) பொருட்கள் சேவைகளின் விலை மாற்றத்தினால் நுகர்வோரின் வருமானம் வீழ்ச்சியடைதல்

(2) வருமான விளைவு, பதிலீட்டு விளைவின் தேறியவிளைவு நேர்கணியப் பெறுமதியைக் கொண்டிருத்தல்.

(3) பொருட்களின் விலை குறைவடையும் போது நுகர்வோர் சுவை அதிகரிப்பதால் ஆகும்.

(4) விலை குறைவடைய பொருளின் தரம் குறைவடைகின்றது என நுகர்வோன் எண்ணுவதால் ஆகும்

(5) இது இழிவுப் பொருள்கள் மற்றும் கிபன் பொருள்கள் தொடர்பாக நிலவுகின்ற பண்பாகும்.

**9.** கேள்வித்தொகை அதிகரிப்பு(Quantity demanded increased / demand is expanded) ஒன்று ஏற்பட்டுள்ளது எனின் பின்வருவனவற்றுள் சாத்தியமானது எது

(1) குறித்த பண்டத்தின் விலை அதிகரித்துள்ளது

(2) தொடர்புடைய பிரதியீட்டுப் பண்டத்தின் விலை அதிகரித்துள்ளது

(3) தொடர்புடைய நிரப்புப் பண்டத்தின் விலை அதிகரித்துள்ளது

(4) நுகர்வோன் மெய் வருமானம் அதிகரித்துள்ளது

(5) நுகர்வோன் சுவை சாதகமாக மாறியுள்ளது.

**10.** குறித்த சந்தையின் சமநிலை விலை 40 ரூபா சமநிலைத்தொகை 2000அலகுகளாகக் காணப்பட்டது அப்புள்ளியில் கேள்வி நெகிழ்ச்சி -2 ஆகக் காணப்பட்டது எனின் சந்தையின் கேள்வியின் உயர்ந்த பட்ச விலை யாது?

(1) 60/= (2) 80/= (3) 100/=
(4) 120/= (5) 20/=

**11.** குறித்த பண்டத்தின் நிரம்பல் கோடு உற்பத்தி மூலப்புள்ளிக்கூடாக ஆரம்பித்துச் செல்லும் நேர் கோடாகும் இப்பண்டத்தின் சமநிலையில் கேள்வி நெகிழ்ச்சி நிரம்பல் நெகிழ்ச்சியின் இரண்டு மடங்காகும் இப்பண்டத்தின் விலை 1ரூபாவால் அதிகரித்தால் நிரம்பல் 100அலகுகளால் அதிகரிக்கும். எனின் சமநிலையில்

(1) நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் சமனாகக் காணப்படும்.

(2) உற்பத்தியாளன் மிகையின் இரண்டு மடங்காக நுகர்வோன் மிகை காணப்படும்

(3) நுகர்வோன் மிகையின் இரண்டு மடங்காக உற்பத்தியாளன் மிகை காணப்படும்.

(4) அது கொள்வனவாளர் உற்பத்தியாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப வேறுபடும்

(5) நுகர்வோன்மிகை கட்டாயம் பூச்சியமாகக் காணப்படும்

**12.** நெகிழ்வற்ற நிரம்பலைக் (inelastic supply) கொண்ட பொருளுக்கு அரசாங்கம் மானியத்தை அறிமுகப்படுத்தினால், அதன் பெறுபேறு;

(1) மானியம் முழுவதனையும் விற்பனையாளா் அனுபவிப்பா்.

(2) மானியம் முழுவதனையும் நுகா்வோா் அனுபவிப்பா்.

(3) மானியத்தின் அதிகப்படியான பங்கினை விற்பனையாளா் அனுபவிப்பா்.

(4) மானியத்தின் அதிகப்படியான பங்கினை நுகா்வோா் அனுபவிப்பா்.

(5) மானியம் இருவரிடையேயும் சமனாகப் பங்கிடப்படும்.


**13.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது Z பண்டத்தின் கேள்வி நிரம்பலினை புலப்படுத்துகின்றது.

| பண்டம்Z இன்விலை($) (வரிக்கு முன்) | கேள்வி (000') | நிரம்பல் (000') |
|---|---|---|
| 1 | 150 | 120 |
| 2 | 140 | 140 |
| 3 | 130 | 160 |
| 4 | 120 | 180 |
| 5 | 110 | 200 |

மேலுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி விடையளிக்குக.
அலகுவரியாக அரசு 3$ ஐ அறிமுகப்படுத்தின் நுகர்வோன் தாங்கும் அலகு வரி?

(1). $ 4 (2). $ 3 (3). $ 2 (4). $ 1 (5). $ 1.5

**14.** இரு கேள்விக் கோடுகள் கீழே தரப்பட்டுள்ளன.




மேற்படி இரு கேள்விக் கோடுகளிலும் நுகர்வோன் செலுத்த தயாரா உச்ச விலை சமன் அது 10ரூபாவிலும் அதிகம் எனின் 10ரூபா விலையில் இரு கோடுகளுக்குமான விலை சார் கேள்வி நெகிழ்ச்சி

(1). Aயினது கேள்வி நெகிழ்ச்சிBயினது கேள்வி நெகிழ்ச்சியினது இரண்டு மடங்காகக் கட்டாயம் காணப்படும்
(2). Aயினது கேள்வி நெகிழ்ச்சி Bயினது கேள்வி நெகிழ்ச்சியிலும் அதிகமாகும்
(3). Aயினது கேள்வி நெகிழ்ச்சி Bயினது கேள்வி நெகிழ்ச்சியிலும் குறைவாகும்
(4). Aயினது கேள்வி நெகிழ்ச்சி Bயினது கேள்வி நெகிழ்ச்சியிக்குச் சமமாகும்.
(5). Aயினது கேள்வி நெகிழ்ச்சி ஒன்றிலும் குறைவாகக் கட்டாயம் காணப்படும் அதேவேளை Bயினது கேள்வி நெகிழ்ச்சி ஒன்றிலும் அதிகமாகக் காணப்படும்.

**15.** அரசாங்கம் அரிசிக்கு குறைந்தபட்ச கட்டுப்பாட்டுவிலையை நிர்ணயிக்குமேயானால், அதன் தாக்கம்;
(1) கேள்வியானது நிரம்பலைவிட அதிகரிக்கும்.
(2) கறுப்புச் சந்தை (black market) விலை ஏற்படும்.
(3) மேலதிக உற்பத்தியை அரசாங்கம் கொள்வனவு செய்யவேண்டியேற்படும்.
(4) சந்தையை ஒழுங்குபடுத்துவதற்காக அரசாங்கம் பங்கீட்டுத் திட்டங்களை (rationing schemes) அறிமுகப்படுத்தும்
(5) சமூகநலன் இழப்புக்கள் எதுவும் ஏற்படமாட்டாது.

**16.** கீழே தரப்பட்ட கூற்றினைப் பூர்த்தி செய்வதற்கு பின்வரும் தரவுகளில் மிகப் பொருத்தமானது
சராசரி பௌதீக உற்பத்தி (APP) உயர்வாகக் காணப்படும் போது……..........................

(1) பௌதீக எல்லை உற்பத்திக்கு அது சமனாகக் காணப்படும்
(2) மொத்த பௌதீக உற்பத்தி உயர்வாகக் காணப்படும்
(3) பௌதீக எல்லை உற்பத்தி உயர்வாகக் காணப்படும்

(1) (1)மட்டும் சரி (2) (1)ம்(2)ம் சரி (3) (1)ம்(3)ம் சரி
(4) (2)ம் (3)ம் சரி (5) யாவும் சரி

**17.** கீழே குறித்த நிறுவனத்தின் செலவு தொடர்பான அட்டவணை வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| வெயியீடு | 0 | 1 | 2 | 3 |
| மொத்த செலவு | 1500 | 1700 | 1850 | 1950 |

மேலே நிறுவனம் 3ம் அலகை உற்பத்தி செய்த போது சராசரி மாறும்செலவு (AVC) மற்றும் எல்லைச் செலவு(MC) முறையே

(1) AVC=100 ,MC=150 (2) AVC=150,MC=100 (3) AVC=150 ,MC=450
(4) AVC=650 ,MC=100 (5) AVC=650,MC=450

**18.** குறித்த நிறுவனத்தின் ஒரு பொருளுக்கு எல்லா விலைகளிலும் கேள்வி நெகிழ்ச்சி ஒருமை நெகிழ்ச்சியாகும். இப்பண்டத்தின் தற்போதைய விலை P யாகும். கீழே தரப்பட்ட எக் கூற்று அல்லது கூற்றுக்கள் சரியானவை.

கூற்று 1: இவ் நிறுவனத்தின் எல்லை வருமானம் பூஜ்ஜியம்.
கூற்று 2: இவ் நிறுவனத்தின் சராசரி வருமானம் மாறாது.
கூற்று 3: இவ் நிறுவனத்தின் மொத்த வருமானம் தற்போது காணப்படும் விலையில் உச்சப்படுத்தப்படும்.

(1) கூற்று 1 மட்டும் சரி (2) கூற்றுக்கள் 1உம் 2உம் மட்டும் சரி
(3) கூற்று 3மட்டும் சரி (4) கூற்றுக்கள் 1உம் 3உம் மட்டும் சரி
(5) கூற்றுக்கள் எல்லாம் சரி

**19.** மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் ஒரு கூறாகிய சொத்துக்களிலிருந்தான மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் உள்ளடக்கப்பட முடியாத விடயம் எது?

(1) அறிவுசார் ஆதன உற்பத்தி (2) பயிரிடப்பட்ட உயிரியல் மூலப்பொருட்கள்
(3) கட்டடவாக்கம் (4) இருப்புக்களில் மாற்றம்
(5) பொறிகள்,கருவிகள் மற்றும் ஆயுத முறைமை

**20.** இலங்கையின் தேசிய கணக்குகளைத் தொகுக்கும் செய்முறையைத் தரமுயர்த்தியத்திற்கமைய தேசிய கணக்குகளைத் தொகுக்க அடிப்படையாண்டாகக் கொள்ளப்படும் ஆண்டு

(1) 2002 (2) 2004 (3) 2006 (4) 2008 (5) 2010

**21.** கூட்டுமொத்தக்கேள்வியில் (aggregate demand) அதிகரிப்பை எவ்வாறு அடையலாம்?

(1) நேரில் வரி விகிதங்களை (indirect tax rates) அதிகரிப்பதன் மூலம்.
(2) உட்கட்டமைப்புக்களில் பொதுச் செலவினத்தை அதிகரிப்பதன் மூலம்.
(3) வட்டி விகிதங்களை அதிகரிப்பதன் மூலம்.
(4) இலங்கை ரூபாவின் வெளிவாரிப் பெறுமதியை (external value) அதிகரிப்பதன் மூலம்.
(5) பொருளாதார மந்தநிலைமை ஒன்றை உருவாக்குவதன் ஊடாக

**22.** ஒரு கற்பனைப் பொருளாதாரத்தின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 10% இனாலும் பணவீக்க வீதம் 2%இனாலும் அதிகரித்தால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உண்மை வளர்ச்சி வீதம் எவ்வளவால் அதிகரிக்கும்?

(1) 5% (2) 8% (3) 12% (4) 15% (5) 20%

**23.** சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பின்வருமாறு மதிப்பிடப்படும்

(1) வேளாண்மை,காடாக்கல்,மீன்பிடித்தல் + கைத்தொழில் + பணிகள்
(2) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி + உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள் + உலகம் முழுவதிலிருந்தான முதன்மை வருமானங்கள்
(3) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி - உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள் - உலகம் முழுவதிலிருந்தான முதன்மை வருமானங்கள்
(4) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி + உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள்
(5) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி - உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள்


**24.** ஒரு மூடியபொருளாதாரத்தில் நுகர்வு **C = 1000 +0.8yd** இப்பொருளதாரத்தில் வரி 200 மில்லியனால் அதிகரிக்கும் அதேவேளை அரச செலவீடும் 200 மில்லியனால் அதிகரிக்கின்றது எனின் இதன் விளைவாக

(1). சமநிலைத் தேசிய வருமானம் 200 ஆல் குறைவடையும்
(2). சமநிலைத் தேசிய வருமானம் மாறாது.
(3). சமநிலைத் தேசிய வருமானம் 200 ஆல் அதிகரிக்கும்.
(4). சமநிலைத் தேசிய வருமானம் 200 ஆல் குறைவடையலாம் அல்லது அதிகரிக்கலாம்.
(5). சுமநிலைத் தேசிய வருமானத்திற்கும் வரி விதிப்பிற்கும் தொடர்புகள் எதுவுமில்லை.

**25.** திறந்த பொருளாதாரத்தின் தரவுகள் வருமாறு சமநிலைத் தேசிய வருானத்திற்கான தொகுதியை தெரிவு செய்க.

| | Y | C | S | T | M | I | G | X |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 10 | 8 | 0 | 2 | 2 | 8 | 4 | 4 |
| (2) | 20 | 16 | 2 | 2 | 4 | 8 | 4 | 4 |
| (3) | 30 | 24 | 4 | 2 | 6 | 8 | 4 | 4 |
| (4) | 40 | 32 | 6 | 2 | 8 | 8 | 4 | 4 |
| (5) | 50 | 40 | 8 | 2 | 10 | 8 | 4 | 4 |

**26.** ஒரு ஒளிய பொருளாதாரத்தின் வரைபு தரப்பட்டுள்ளது.இங்கு நுகர்வுக்கோட்டில் $C-C_1$ இனை நோக்கி ஒரு அசைவு இடம்பெறும் போது




| தன்னிச்சையான செலவீடு | பெருக்கி |
|---|---|
| (1) அதிகரிக்கும் | குறைவடையும் |
| (2) குறைவடையும் | அதிகரிக்கும் |
| (3) அதிகரிக்கும் | மாறாது |
| (4) மாறாது | மாறாது |
| (5) மாறாது | அதிகரிக்கும். |

The National e-learning Portal for The General Education

**27.** கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்' என்பவற்றிற்கு பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட சுட்டெண்கள் முறையே

(1) கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண், உற்பத்தியாளன் விலைச்சுட்டெண்
(2) தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண், உற்பத்தியாளன் விலைச்சுட்டெண்
(3) கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்,தேசிய உற்பத்தியாளன் விலைச்சுட்டெண்
(4) புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் , உற்பத்தியாளன் விலைச்சுட்டெண்
(5) கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்,தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்

**28.** பணவீக்கத்தின் பொருளியல் செலவு என்பது குறித்து நிற்பது

(1) பணவீக்கம் காரணமாக விலைமட்டம் அதிகரித்தலைக் குறிக்கும்.
(2) பணவீக்கம் காரணமாக கொள்வனவு ஆற்றல் குறைவடைவதைக் குறிக்கும்.
(3) பணவீக்கம் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளின் வினைத்திறன் குறைவடைவதைக் குறிக்கும்
(4) பணவீக்கம் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளின் வினைத்திறன் அதிகரிப்பதைக் குறிக்கும்
(5) பணவீக்கம் காரணமாக பொருளாதார வளங்கள் உச்சமாகப் பயன்படுத்தப்படுவரதக் குறிக்கும்.

**29.** பணத்தின் உத்தேச நோக்க /ஊகநோக்க கேள்வி என்பதனைக் குறிப்பிடுவது.

(1) குறிப்பிட்ட ஒரு நேரத்தில் பணத்தைப் பணமாக வைத்திருப்பதற்குப் பொதுமக்களிடம் உள்ள விருப்பம்
(2) குறித்த நேரத்தில் மக்கள் பணத்தினை வைத்திருக்கும் அளவைக் குறிக்கும்.


(3) தனிநபர் ஒருவர் வருமானம் பெற்றுக்கொள்வதும் செலவு செய்வதும் ஒன்றுக்கொன்று பொருந்திய மையாத காரணத்தால் கொடுக்கல்வாங்கல் நோக்கத்திற்காகப் பணத்தை தம்மிடம் வைத்திருப்ப தனைக் கருதும்
(4) எதிர்பாராத நிலைமைளில் ஏற்படக்கூடிய செலவுகளை ஈடுசெய்வதற்காக பொதுமக்கள் பணத்தை தம்மிடம் வைத்திருப்பதனைக் கருதும்
(5) எதிர்காலத்தில் வருமானம் உழைக்கும் நோக்குடன் வேறுசொத்துக்களில் முதலீடு செய்வதற்காகப் பணத்திற்குக் காணப்படும் கேள்வி

**30.** பகுதியளவு ஒதுக்கினைக் கொண்ட வங்கி முறைமை என்பது
(1). ஒதுக்கினை தனது கையிலுள்ள பணமாக மட்டும் வைத்திருக்கும் வங்கி முறைமை
(2). ஒதுக்கினை மத்திய வங்கியில் மட்டும் வைப்பாக வைத்திருக்கும் வங்கி முறைமை
(3). வைப்பாளர் தம்மிடம் வைப்புச் செய்யும் பணத்தில் ஒருபகுதியை மட்டும் ஒதுக்காக வைத்துக் கொண்டு மீதியினை மீளக் கடன்களாக கடன் பெறுவோருக்கு வழங்குவதன் மூலம் இலாபம் உழைப்பதில் ஈடுபட்டுள்ள வங்கி முறைமை
(4). வைப்பிலிடப்பட்ட பணத்தை பொறுப்பேற்றுப் பாதுகாத்தலுடன் வைப்பாளர் கேட்டவுடன் மீள ஒப்படைக்கும் பணியை மட்டுமே மேற்கொள்கின்ற கடன் கொடுக்கும் பணியில் ஈடுபடாத வைப்பு முழுவதையும் ஒதுக்குக்காகப் பேணும் வங்கிகள்.
(5). சட்ட ரீதியான ஒதுக்குவீதத்தை விடக் கூடுதலாக காணப்படுகின்ற ஒதுக்குகளை பேணுகின்ற வங்கி

**31.** பொருளாதார எழுச்சியை தூண்டும் வகையில் சந்தையிலிருந்து அரசபிணைப் பத்திரங்களின் (securities)கொள்வனவுக்காக மத்தியவங்கி புதிதாக பணத்தினை உருவாக்குவதும், பாரம்பரியமற்ற நாணயக் கொள்கையை கடைப்பிடிக்கும் தற்காலப் போக்கு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பண உருவாக்கம் (Creation of money)
(2) கணியரீதியான இலகுபடுத்தல் (Quantitative easing)
(3) தரரீதியான இலகுபடுத்தல் (Qualitative easing)
(4) நயவிணக்கம் (Moral suasion)
(5) வட்டி நிர்ணயம்.

**32.** பொதுவான வங்கி முறைமையில் தொழிற்படும் வணிக வங்கிகளின் ஐந்தொகையில் கடன்களின் அளவு 7500 ரூபாவினால் அதிகரிக்க வேண்டுமாயின் 25% சட்டப்படியான ஒதுக்கு விகிதத்திற்கு அமைய பூச்சிய மிகை ஒதுக்கைப் பேணுகின்ற வங்கிமுறைமையின் ஆரம்ப வைப்பில் ஏற்பட வேண்டிய அதிகரிப்பு யாது?
(1) 1875 (2) 2000 (3) 2500
(4) 1500 (5) 1000

**33.** குறித்த பண்டத்தின் எல்லைச் சமூக நன்மை , எல்லைத் தனிப்பட்ட நன்மை, எல்லைச் சமூகச் செலவு , எல்லைத் தனிப்பட்ட செலவு தொடர்பான வரைபு வருமாறு




மேற்படிப்பண்டம் எவ்வகையான பண்டம் ஆகும்.
(1) மேன்மையான பண்டம் ஆகும் (2) மேன்மையல்லாப்பண்டம் ஆகும்
(3) பொதுப்பண்டமாகும் (4) அரைகுறைப் பொதுப்பண்டமாகும்
(5) தீய பண்டமாகும்.

**34.** முதன்மை கணக்கு நிலுவை பின்வரும் எம் முறையில் கணிப்பிடப்படும்
(1) முதன்மை கணக்கு நிலுவை = அரச வருமானம் - அரச செலவீனம்
(2) முதன்மை கணக்கு நிலுவை = அரச வருமானம் - அரச நடைமுறை செலவினம்
(3) முதன்மை கணக்கு நிலுவை = சமூக நிலுவை + வெளிநாட்டு கொடைகள்

(4) முதன்மை கணக்கு நிலுவை = பாதீட்டுப் பற்றாக்குறை - கடன் மீள் கொடுப்பனவு
(5) முதன்மை கணக்கு நிலுவை = அரச வருமானம் - வட்டிக் கொடுப்பனவு நீக்கப்பட்ட அரச செலவு

**35.** எந்த இறைவரிக் கொள்கை நடவடிக்கைகள் நாட்டின் வருமானப் பரம்பலின் சமனின்மை குறைவடைதலைச் சாத்தியமாக்கும்?
(1) உயர்ந்த வருமானம் பெறுவோருக்கு வரிவிகிதங்களின் மட்டத்தினை குறைத்தல்.
(2) வருமானம் மீதான வரிவிலக்கு எல்லையினை (tax - free threshold) அதிகரித்தல்.
(3) அத்தியாவசிய சேவைகள் மீதான வரி மட்டத்தினை அதிகரித்தல்.
(4) ஆடம்பரப் பொருட்கள் மீதான வரி மட்டத்தினை குறைத்தல்.
(5) வரிகளை நீக்குதல்

**36.** 2015 ஆம் ஆண்டின் அரசின் அரசிறை மற்றும் கொடைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவாகக் காணப்பட்டது,
(1) 13.3 (2) 14.3 (3) 12.2 (4) 12.0 (5) 11.6

**37.** தரப்பட்ட ஒரு அலகு உள்ளீட்டினைப் பயன்படுத்தி இரு கற்பனை நாடுகள் பெற்றுக் கொள்ளக் கூடிய உற்பத்திச்சாத்தியங்கள் கீழ்வருமாறு:

| நாடு | கோதுமை (கி.கிராம்) | ஆடை (மீற்றர்) |
|---|---|---|
| **A** | **10** | **6** |
| **B** | **2** | **4** |

ஒப்பீட்டு அனுகூலம் பற்றிய றிக்காடியன் (Ricardian) கோட்பாட்டின் அடிப்படையில்
(1) நாடுகள் A மற்றும் B க்கு இடையில் பரஸ்பர நன்மையளிக்கும் வணிகம் இல்லை.
(2) நாடு A கோதுமை உற்பத்தியிலும் நாடு B ஆடை உற்பத்தியிலும் விசேடத்துவம் பெறுதல் வேண்டும்.
(3) நாடு A ஆடை உற்பத்தியிலும் நாடு B கோதுமை உற்பத்தியிலும் விசேடத்துவம் பெறுதல் வேண்டும்.
(4) நாடு A கோதுமை மற்றும் ஆடை உற்பத்தி இரண்டிலும் விசேடத்துவம் பெறவேண்டும்.
(5) இரண்டு பண்டங்களிலும் B நாட்டிற்கு முழுநயம் உள்ளது.

**38.** மத்திய வங்கி ஆண்டறிக்கையின் பிரகாரம் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) வழங்கப்பட்ட சென்மதி நிலுவைகளின் BPM6 முன்னிலைப்படுத்தல் வடிவமைப்பினை (format) பின்பற்றுகின்றது. இந்த புதிய வடிவமைப்பின் பிரகாரம், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் உபகணக்குகள் (sub accounts) எவை?
(1) வியாபார மீதி, சேவைகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்கள்
(2) பொருட்கள் மீதி, சேவைகள், வருமானம் மற்றும் மாற்றல்கள்
(3) பண்டக்கணக்கு , சேவைகள் கணக்கு, முதன்மை வருமானக் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு
(4) புலப்படக்கூடிய மீதி (visible balance), புலப்படாத மீதி, முதன்மை வருமானம் மற்றும் நடப்பு மாற்றல் வருமானம்.
(5) பண்டக்கணக்கு , சேவைகள் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் நடப்புமாற்றல் கணக்கு

**39.** நிலையான நாணயமாற்று விகித முறைமையின் அனுகூலமாகக் கருதப்படக் கூடியது.
(1). நாணயமாற்று விகிதம் நடப்புப் பொருளாதார நிலைகளை பிரதிபலிப்பதனால், வளங்கள் வினைத்திறனாக ஒதுக்கப்படுவதனை ஊக்குவிக்கின்றது.
(2) சென்மதி நிலுவை (Balance of Payments) பற்றாக் குறைகளும் மிகைகளும் சுயமாக (automatically) சீராக்கப்படுகின்றன.

(3) அரசாங்கம் அந்நிய நாணய ஒதுக்கத்தை (foreign currency reserves) பேண வேண்டிய தேவையில்லை.
(4). இது நாணயமாற்று விகித நிச்சயமற்ற தன்மையினை நீக்குவதன்மூலம் சர்வதேச வியாபாரத்தை ஊக்குவிக்கின்றது.
(5) சந்தை மாற்றங்களுக்கமைய வருமானத்தை ஈட்டுவதற்கு ஏற்றுமதியாளருக்கு உதவும்.

**40.** பின்வரும் எச்சூழ்நிலையில் நாடொன்றின் பண்ட வர்த்தகமாற்றுவிகிதம் முன்னேற்றம் அடையும்.
(1). ஏற்றுமதிக் கட்டளைகள் இறக்குமதிக்கட்டளைகளை விடக் கூடுதலாக அதிகரித்தல்
(2). ஏற்றுமதி விலைகள் இறக்குமதி விலைகளை விடக் கூடுதலாக அதிகரித்தல்
(3). ஏற்றுமதி வருவாய்கள் இறக்குமதிச் செலவினங்களை விடக் கூடுதலாக அதிகரித்தல்
(4). ஏற்றுமதித் தொகை இறக்குமதித் தொகையைவிடக் கூடுதலாக அதிகரித்தல்
(5). பொருள்கள் ஏற்றுமதி வருவாய் சேவைகள் ஏற்றுமதி வருவாய்களுக்குச் சமப்படல்

**41.** ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி இலங்கை ரூபாவுக்கு எதிராக ரூபா 150 இலிருந்து ரூபா 200ஆக மாற்றமடைந்தது இத்தகவலுக்கு ஏற்புடையதாக அமையும் கூற்று
(1). இலங்கைக்குள் வரும் அமெரிக்கப் பயணிகள் இப்போது பாதிப்புக்குள்ளாவார்கள்
(2). இலங்கை வொஷிங்டனில் உள்ள தனது தூதரகத்தை பேணும் செலவு குறைவடையும்
(3). இலங்கை ரூபா டொலருக்கு எதிராகப் பெறுமதி தேய்வடைந்துள்ளது.
(4). இலங்கை ரூபா டொலருக்கு எதிராகப் பெறுமதி கூடியுள்ளது
(5). ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் இப்போது செலவு கூடியவையாக மாறியுள்ளன

**42.** A நாட்டில் நிலையான நாணயமாற்று வீதம் நிலவுவதாகக் கருதுக. அந்நாட்டின் பணவீக்கம் அதன் வர்த்தகப் பங்காளி நாட்டுடன் ஒப்பிடுகையில் சார்பளவில் உயர்ந்து செல்கிறது. இதனால் A நாட்டின் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் எவ்விதத்தில் மாற்றம் அடையும்.

| | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
|---|---|---|
| 1 | குறையும் | குறையும் |
| 2 | குறையும் | அதிகரிக்கும் |
| 3 | அதிகரிக்கும் | குறையும் |
| 4 | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5 | மாறாது | மாறாது. |

**43.** யாவும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பதனைக் குறித்து நிற்பது
(1) பொருளாதாரத்தின் சாத்தியவள வெளியீட்டில் ஏற்பட்ட நீண்டகால தொடர்ச்சியான அதிகரிப்பு
(2) பொருளாதாரத்தின் மெய்த்தேசிய உற்பத்தி அல்லது மெய் உள்நாட்டு உற்பத்தியில் நீண்ட காலத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு
(3) பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் பரவும் வண்ணம் உயர்வான பேணத்தகு அபிவிருத்தி யடையப்படவது
(4) அனைத்து மக்களுக்கும் வேவைலவாய்ப்பினை வழங்கி அடையபடயப்படும் வளர்ச்சி
(5) பணவீக்கத்தாக்கங்களின்றி வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளும் வளர்ச்சி

**44.** 2015 செப்டெம்பரில் உருவாக்கப்பட்ட புதிய உலகிற்கான நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள் வெளியிடப்பட்டது. இது 17 நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை உள்ளடக்கியது அவற்றுள் அடங்காதது.
(1) வறுமையை அனைத்து இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் முடிவுறுத்தல்
(2) பட்டினியை முடிவுறுத்தல் உணவுப்பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசனை என்பவற்றை அடைதல் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய வேளாண்மையை ஊக்குவித்தல்
(3) ஆராக்கியமான வாழ்க்கையை நிச்சயப்படுத்தல் மற்றும் அனைத்து வயதிலும் அனைவரினதும் நல்வாழ்வை மேம்படுத்தல்.
(4) உள்ளடக்கமானதும் சமத்துவமானதுமான தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்கின்ற வாய்ப்பபை மேம்படுத்தல்.

(5) பால் சமத்துவத்தை அடைதலும் அனைத்து பெண்கள் மற்றும் மகளிருக்கும் உரிமை களைத் தடுத்தலும்.

**45.** இலங்கையின் மிக அண்மைக்கால பொருளாதார வளர்ச்சிவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதமாக
(1) 8.4 (2) 9.1 (3) 8.0 (4) 4.8 (5) 3.4

**46.** இலங்கையின் மிக அண்மைக்கால தொழிலற்றோர் வீதம் எது என்பதனைப் பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க
(1) 4.7 (2) 4.3 (3) 4.4 (4) 4.2 (5) 4.0

**47.** இலங்கைப் பொருளாதாரத்தின் முதியோர் சனத்தொகை தொடர்பாக (UN 2015)படி சரியான தகவல்

(1) 2015 இல்இலங்கையின் குடித்தொகையானது 20.96 மில்லியனை அடைவதுடன் அதில் முதியோர் சனத்தொகை 13.9%ஆகக் காணப்படும்.இவ் முதியோர் சனத்தொகையானது 2050 மற்றும் 2100 களில் முறையே 28.6% , 40.0% ஆக விரைவாக அதிகரிக்கும்.

(2) 2015 இல்இலங்கையின் குடித்தொகையானது 30.96 மில்லியனை அடைவதுடன் அதில் முதியோர் சனத்தொகை 13.9%ஆகக் காணப்படும்.இவ் முதியோர் சனத்தொகையானது 2050 மற்றும்2100 களில் முறையே 28.6% , 40.0% ஆக விரைவாக அதிகரிக்கும்.

(3) 2015 இல் இலங்கையின் குடித்தொகையானது 40.96 மில்லியனை அடைவதுடன் அதில் முதியோர் சனத்தொகை 13.9%ஆகக் காணப்படும்.இவ் முதியோர் சனத்தொகையானது 2050 மற்றும் 2100 களில் முறையே 48.6% , 50.0% ஆக விரைவாக அதிகரிக்கும்.

(4) 2015 இல்இலங்கையின் குடித்தொகையானது 20.96 மில்லியனை அடைவதுடன் அதில் முதியோர் சனத்தொகை 23.9%ஆகக் காணப்படும்.இவ் முதியோர் சனத்தொகையானது 2050 மற்றும் 2100 களில் முறையே 28.6% , 40.0% ஆக விரைவாக அதிகரிக்கும்.

(5) 2015 இல்இலங்கையின் குடித்தொகையானது 20.96 மில்லியனை அடைவதுடன் அதில் முதியோர் சனத்தொகை 3.9%ஆகக் காணப்படும்.இவ் முதியோர் சனத்தொகையானது 2050 மற்றும் 2100களில் முறையே 28.6% , 40.0% ஆக விரைவாக அதிகரிக்கும்.

**48.** இலங்கையின் அண்மைக்காலக் குடித்தொகை இயக்கவியில் தொடர்பான சரியான கூற்று
(1) கருவுற்றல் வீதமானது ஒரு பாரிய வீழ்ச்சியைக் காட்டுகின்றது.
(2) கருவுற்றல் வீதமானது ஒரு பாரிய அதிகரிப்பினைக் காட்டுகின்றது.
(3) கருவுற்றல் வீதமானது சராசரியான நிலையான அதிகரிப்பினைக் காட்டுகின்றது
(4) முதியோர் சனத்தொகை குறைவடைந்து தங்கிவாழ்வோர் குறைவடைவதைக் காட்டுகின்றது
(5) இலங்கையில் சனத்தொகை வெடிப்பு கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ளது.

**49.** உலக முதியோர் வாழ்க்கைத்தர அளவீட்டுச்சுட்டெண்(Gobal Age watch Index) எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது.
(1) 2015 ஜனவரி 20 (2) 2014 ஒக்டோபர் 01 (3) 2013 ஒக்டோபர் 01
(4) 2013 ஜனவரி 20 (5) 2012 ஒக்டோபர் 01

**50.** இலங்கையின் பிறப்பிலிருந்து வாழ்நாள் எதிர்பார்ப்பு 2015 இன் படி
(1) 77 வருடங்கள் (2) 74.9 வருடங்கள் (3) 75 வருடங்கள்
(4) 72 வருடங்கள் (5) 70 வருடங்கள்

AL/2017/21/T-II

# வடமாகாணக் கல்வித்திணைக்களம்

## மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை ,2017 வைகாசி

General Certificate of Education (Adv. Level ) Examination ,May2017

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் II<br>Economics II | 21 | T | II | மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

**அறிவுறுத்தல்கள்:**

* உப பிரிவு **அ** விலிருந்து இரண்டு வினாக்களுக்கும்

**ஆ** விலிருந்து இரண்டு வினாக்களும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

### உப பிரிவு (அ)

**1.** 1. அமையச்செலவு தோற்றம் பெறுவதற்கு அருமை மட்டும் போதுமான நிபந்தனை இல்லை இக் கூற்றினை விளக்குக? (4புள்ளிகள்)

2. பொருளாதார வளங்கள் என்றால் என்ன? இவற்றின் வினைத்திறனை அதிகரிக்க மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

3. உழைப்பு மற்றும் மனிதமூலதனம் ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக (4புள்ளிகள்)

4. உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி விளக்கக் கூடிய சிற்றினப் பொருளாதார பிரயோகங்கள்,பேரினப்பொருளாதாரப் பிரயோகங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு குறித்துக் காட்டுக? (4புள்ளிகள்)

5.(அ) பொருளாதார முறைமைகளை வகைப்படுத்த உதவும் அடிப்படை நியதிகள் எவையெனக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

(ஆ) பொருளாதார முறைமைகளின் செயலாற்றுகையை மதிப்பிட உதவும் தகுதிகாண் நியதிகள் **(criteria)**சிலவற்றைக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

**2.** 1.(அ).விலைமாற்றத்தின் வருமான விளைவு பதிலீட்டு விளையின் தேறியவிளைவு எதிர்கணியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் எவ்வாறு அழைக்கப்படும்? இத்தகைய தன்மையுடைய பண்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

(ஆ)விலைமாற்றத்தின் வருமான விளைவு என்பதனை விளக்குக? (2புள்ளிகள்)

2. (i) பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எத்தகைய விலைசார் கேள்வி நெகிழ்ச்சியினைப் பிரதிபலிக்கின்றன என்பதனைக் குறிப்பிடுக?

(அ) ஏனையவை மாறாத போது குறித்த பண்டத்தின் விலை அதிகரித்த போது நுகர்வேவான் செலவு அதிகரித்தது.

(ஆ) நிலவுகின்ற சந்தை விலையில் நிறுவனத்தின் மொத்த வருமானம் உச்சப்படுத்தப்பட்டுள்ளது. (2புள்ளிகள்)

(ii) பண்டத்திற்குப் பண்டம் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி வேறுபடுவது ஏன்? (2புள்ளிகள்)

3. நிரம்பல் விதி என்பதனை விளக்கி அது தொழிற்படுவதற்கான பிரதான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

4. ஆகக் குறைந்த கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படுவதன் காரணமாகச் சந்தையில் ஏற்படக் கூடிய விளைவுகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

5. குறித்தபண்டத்தின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு

$Qd = 8000-100p$

$Qs = -1000 +200p$

குறித்தளவு அலகு வரி விதிக்கப்பட்ட பின்னர் நிரம்பல் சமன்பாடு $Qs_T = -1600 +200p$ ஆகக் காணப்படட்டது.

அ. அரசு விதித்த அலகு வரியாது? (2புள்ளிகள்)

ஆ. அலகு வரி விதிப்பினால் ஏற்பட்ட மீளமுடியாச் சமூக நலன் இழப்பு யாது? (2புள்ளிகள்)

**3.** 1. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்பதனை விளக்கி அதனுடன் தொடர்புடைய எடுகோள்களைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

2. உற்பத்திச் செலவு, நேர்ச்செலவு, மறைமுகச்செலவு, ஆழ்செலவு ஆகியவற்றை விளக்குக? (4புள்ளிகள்)

3. சாதாரண இலாபம் என்றால் என்ன? இது உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாகக் கருதப்படுமா? விளக்குக? (4புள்ளிகள்)

4. சிலருரிமைச் சந்தையினைத் தனியுரிமைப் போட்டிச் சந்தையிலிருந்து வேறுபடுத்துக? (3புள்ளிகள்)

5. நிறைபோட்டி நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டத்தை தீர்மானிக்கும் இரு முறைகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக? (5புள்ளிகள்)

**4.** 1. பொருளாதாரப்பரப்பொன்றில் செயற்படும் நிறுவன அலகுகளைக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

2. அடிப்படைவிலை,உற்பத்தியாளரின் விலை மற்றும் கொள்வனவாளரின் விலை ஆகிய எண்ணக்கருக்களை உதாரணம் மூலம் விளக்குக? (5புள்ளிகள்)

3. முதனிலை வருமானங்கள் என்பதனை விளக்கி அதனுள் அடங்கும் பிரதான கூறுகள் எவையெனக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

4. இலங்கை தேசிய கணக்குகளைத் தொகுக்கும் செய்முறையை தரமுயர்த்தியத்திற்கமைய தேசிய கணக்குகளை தொகுப்பது தொடர்பில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களைக் குறிப்பிடுக? (5புள்ளிகள்)

5. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாத பயன்மிகு பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

**5.** 1. ஏளிய பொருளாதாரம் ஒன்று சமநிலையில் உள்ளதாயின் சேமிப்பு அதன் முதலீட்டுக்குச் சமமாக கட்டாயம் இருத்தல் வேண்டும்.ஆனால் மூடிய பொருளாதாரம் ஒன்றின் சமநிலையின் போது சேமிப்பு கட்டாயம் முதலீட்டுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையல்ல விளக்குக (4புள்ளிகள்)

2. ஒரு மூடிய பொருளாதாரத்தின் வரிப் பெருக்கி −1.5 ஆகக் காணப்பட்டது இப் பொருளாதாரத்தின் தன்னிச்சையான நுகர்வு 500 ஆகும். வருமானத்தால் தூண்டப்பட்ட முதலீடுகள் எதுவம் காணப்படவில்லை தன்னிச்சையான முதலீகள் காணப்படுகின்றது. இப் பொருளாதாரத்தில் வரி(T) 200 மில்லியனால் அதிகரிக்கும் அதேவேளை அரச செலவீடும்(G) 200 மில்லியனால் அதிகரிக்கின்றது எனின் சமநிலைத் தேசிய வருமானம் மாற்றமடையுமா? விளக்குக? (4புள்ளிகள்)

3. எளிய பொருளாதாரம் ஒன்றின் வருமான வட்டப்பாய்ச்சல் ஒன்றை வரைந்து அதன் பணப்பாய்ச்சல்கள், மெய்ப்பாய்ச்சல்கள் என்பவற்றைக் குறித்துக்காட்டுக? (4புள்ளிகள்)

4. பொருளாதாரத்தின் தனியார் நுகர்வுச் செலவினைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினையும், முதலீட்டுச் செலவினைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினையும் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

5. ஒரு எளிய பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவீடுகள் 1000 ஆகக் காணப்பட சமநிலைத் தேசிய வருமானம் 4000 ஆகக் காணப்பட்டது. இப் பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வு 200 ஆகக் காணப்படுகின்றது இப்பொருளாதாரத்தில் தற்போது முதலீடு 100மில்லியனால் அதிகரிக்கின்றது. எனின்

(அ) முதலீடு அதிகரித்த பின் சமநிலைத் தேசிய வருமானம் யாது? (2புள்ளிகள்)
(ஆ) இப் பொருளாதாரத்தின் நுகர்வுச் சமன்பாட்டைத் தருக? (2புள்ளிகள்)

## உப பிரிவு (ஆ)

**6.** 1. பணவீக்கம் என்றால் என்ன? இதன் பொருளியல் செலவுகள் நான்கைக் குறிப்பிடுக? (3புள்ளிகள்)

2. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்குமான ஒற்றுமைகள்,வேற்றுமைகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

3. பணநிரம்பல் என்றால் என்ன?இதற்கும் பணஅடித்தளத்திற்குமிடையேயான தொடர்பினை விளக்குக? (4புள்ளிகள்)

4. இலங்கை மத்திய வங்கி பணக்கொள்கையினை செயற்படுத்துவதற்கான நோக்கத்தை குறிப்பிடுக? (3புள்ளிகள்)

5. கற்பனையான வங்கிமுறைமை ஒன்றின் சட்டப்படியான ஒதுக்கு வீதம் 8% ஆகவும் வங்கிமுறைமைகளால் உருவாக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் 200,000 ரூபாவாகவும் வங்கிகள் வசமுள்ள மொத்த ஒதுக்குகள் 20,000 ரூபாவாகவும் காணப்பட்டது. பொதுமக்கள் வசமுள்ள நாணயம் 80,000 ரூபா எனவும் கருதுக.

அ. கடனாக்கப்பெருக்கியின் பெறுமதி யாது? (2புள்ளிகள்)
ஆ. வெளிநிற்கும் நாணயத்தின் அளவு எவ்வளவு? (2புள்ளிகள்)
இ. சட்டப்படியான ஒதுக்கு வீதத்திற்கமைய பூச்சியமிகை ஒதுக்கைப் பேணி இறுதிக்கடனாக்கச் செய்முறையில் வங்கிகள் ஈடுபடுகின்றன எனின் வங்கிமுறைமையின் சுருக்கிய ஐந்தொகையைத் தருக? (2புள்ளிகள்)

**7.** 1.சந்தைத் தோல்வி என்றால் என்ன? அது ஏற்படுவதற்கான பிரதான காரணங்களைப் பட்டியல்படுத்துக? (4புள்ளிகள்)

2. சந்தைப் பொருளதாரம் ஒன்றில் அரசின் பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

3. வரித்தாக்கம் என்றால் என்ன? இதனடிப்படையில் வரிகளின் பிரதான வகைகளைக் கூறிச் சுருக்கமாக விளக்குக? (4புள்ளிகள்)

4. இறை இடைவெளி என்றால் என்ன? இறை இடைவெளியின் முக்கிய தீர்மானக் காரணிகள் சிலவற்றைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

5. கடந்தகாலங்களில் இலங்கை அரசின் வரிவருமானங்கள் குறைவடைந்த நிலைமை காணப்பட்டது இலங்கை அரசின் வரிவருமானங்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் எவையெனக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

**8.** 1.. இலங்கை நேபாளம் ஆகிய இரண்டு நாடுகள் உள்ளனவெனவும் அவை கார் ,வான் ஆகிய இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தும் ஊழியம் தொடர்பான அட்டவணை வருமாறு நாடுகள் தலா 2000 உள்ளீடுகளைக் கொண்டுள்ளன இவை தம்மிடம் உள்ள வளங்களைச் சரிசமமாகப் பங்கிட்டு உற்பத்தியில் ஈடுபட்டன எனவும் கருதுக.

ஒரு பண்ட அலகினை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தும் ஊழிய அளவு

| | கார் | வான் |
|---|---|---|
| இலங்கை | 4 | 2 |
| நேபாளம் | 4 | 4 |

(அ) சர்வதேச வர்த்தகம் ஒன்று இடம் பெற்றதாயின் நாடுகளிற்கிடையோன பரிமாற்று விகிதம் எவ்வாறு அமைந்திருக்கும்.? (4புள்ளிகள்)

(ஆ) ஒப்பிட்டு நயக்கோட்பாட்டுக்கமைய சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடின் உலக உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு எவ்வளவு? (4புள்ளிகள்)

2. இலங்கையின் அண்மைக்கால ஏற்றுமதிக்கட்டமைப்பின் அண்மைக்காலப் போக்குகளைப் பரிசீலிக்குக? (4புள்ளிகள்)

3. பெயரளவுப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் என்பவற்றை விளக்குக? (4புள்ளிகள்)

4. (அ) சென்மதி நிலுவையின் 6ஆம் பதிப்புக்கமைய முதனிலை வருமானக் கணக்கு என்பதனுள் பதிவு செய்யப்படும் பிரதான இரு கொடுக்கல் வாங்கல்களையும் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

(ஆ) சென்மதி நிலுவையின் 6ஆம் பதிப்புக்கமைய திரண்ட நிலுவை எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது.? (2புள்ளிகள்)

**9.** 1. பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளைப் பட்டியல்படுத்துக? (4புள்ளிகள்)

2. நீதிசார் பொருளாதாரவளர்ச்சி என்பதாற் கருதப்படுவது என்னவென்பதை விளக்குக? (4புள்ளிகள்)

3. பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையானது ஒரு பல்பரிமாணச் செயற்பாடாகும் விளக்குக? (4புள்ளிகள்)

4.(அ) அண்மைக்கால நிலைத்திருக்கும் அபிவிருத்திக்குறிக்கோள் ஐந்து பிரதான விடயங்கள் சார்பாக கவனம் செலுத்துகின்றன அவற்றுள் நான்கைக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

(ஆ) நிலைத்திருக்கும் அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு அவசியமான நால்வகை மூலதனங்களும் எவையெனக் குறிப்பிடுக? (2புள்ளிகள்)

5. அபிருத்திக்கான குறிகாட்டி என்ற வகையில் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணின் வரையறைகளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

**10.** 1. வறியவர்களுக்குச் சார்பான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு மேறகொண்ட நடவடிக்கைகள் எவை? (4புள்ளிகள்)

2. இலங்கையில் ஏற்பட்டு வரும் குடித்தொகை நிலைமாற்றத்தின் முக்கிய பொருளாதார விளைவுகள் எவை? (4புள்ளிகள்)

3. உராய்வு வேலையின்மை,அமைப்புரீதியான வேலையின்மை ஆகியவற்றை விளக்குக. (4புள்ளிகள்)

4. இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் பிராந்திய ரீதியான சமமின்மையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைளைக் குறிப்பிடுக? (4புள்ளிகள்)

5. இலங்கையில் பெண்தொழிற்படைப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் பெண்தொழிலின்மையைக் குறைப்பதற்கும் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவை? (4புள்ளிகள்)